செ.வெ. எண்: 231 நாள்: 27.03.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (27.3.2012) தலைமைச் செயலகத்தில், 11 கடற்கரையோர மாவட்டங்களில் வசிக்கும் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 303 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 8,251 வீடுகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் திறந்து வைத்தார்கள்.

தமிழக கடற்கரை பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான வீடுகள் 26.12.2004-ல் ஏற்பட்ட சுனாமியின் தாக்குதலினால் பெரும் பாதிப்புக்குள்ளாகின. இதனையடுத்து, உலக வங்கி நிதி உதவியுடன் அவசர கால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தை 2005-ம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு உருவாக்கியது. அதன்படி, 11 மாவட்ட கடலோரப்பகுதிகளில் 444 கிராமங்களைச் சார்ந்த கடல் மட்ட உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள பாதிப்புக்குள்ளான 14,364 வீடுகள் கண்டறியப்பட்டு மீளக் கட்டித் தர அரசு முடிவு செய்தது. இவற்றில் முதற்கட்டமாக 8,251 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

அவசர கால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 86 வீடுகளும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 638 வீடுகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 1,377 வீடுகளும், கடலூர் மாவட்டத்தில் 296 வீடுகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 801 வீடுகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 487 வீடுகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 615 வீடுகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,758 வீடுகளும், தூத்துக்குடி மாவட்டத்தில் 408 வீடுகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் 228 வீடுகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 945 வீடுகளும், இராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 612 வீடுகளும், ஆக மொத்தம் 8,251 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டின் பரப்பளவு 325 சதுர அடி ஆகும். இதற்கான கட்டுமானத் தொகை 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஆகும். ஒவ்வொரு வீடும் கூடம், படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை, திண்ணை மற்றும் மாடிப்படிக்கட்டுடன் கூடிய வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இவ்வீடுகள் அனைத்தையும் இயற்கை இடர்பாடுகளான பூகம்பம், புயல் மற்றும் சுனாமி போன்றவற்றால் ஏற்படும் தாக்கத்தை தாங்கக்கூடிய தன்மையிலான உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் இவ்வீடுகள் அனைத்தும் 10 வருடங்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடலோரத்தில் வசிக்கும் குடும்பங்கள் தங்களது வசிப்பிடம் பற்றிய கவலையின்றி தங்களது வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை வழங்கியமைக்காக புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஜெத்ரூத் அவர்கள் நன்றி தெரிவித்து பேசியதாவது:- மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு வணக்கம். அம்மா, இதற்கு முன்பு நாங்கள் குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தோம். மழை, தண்ணீர், புயலால் நாங்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டோம். சுனாமி வரும்போது எங்கே கான்கீரிட் வீடு இருக்கிறது என்று குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஓடினோம். அம்மா உங்கள் கருணையால் எங்களுக்கு நல்ல மாடி வீடு கிடைத்திருக்கிறது. உங்கள் கருணைக்கு மிக்க நன்றி. நீங்கள் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர், சுனாமி திட்ட செயலாக்க அலகு திட்ட இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 27.3.2012